**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 4 December 2022

# மூப்பை மெதுவாக்கும் உலகின் முதல் மருந்தகம்

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் சுகாதாரத் துறையின் நலத்துடன் நீண்ட ஆயுள் நிலையம் நோய்களைக் கண்டறிவதற்கான புதிய மருந்தகத்தை திறக்கும்.

மூப்படையும் நடைமுறையை மெதுப்படுத்த முடியுமா என்பது போன்ற பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பது அதன் நோக்கம்.

அலெக்சாண்டிரா மருத்துவமனையில் அமையும் அந்த மருந்தகம், அடுத்த ஆண்டு தொடக்கத்தில் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான பணிகளை அந்த நிலையம் 2019ஆம் ஆண்டே தொடங்கிவிட்டது. உலகின் முதலாவது இத்தகைய மருந்தகமாக அது இருக்குமென தெரிவிக்கப்பட்டது.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.